DINAMALAR
23. 07. 2016

# 2 குடிநீர் நிறுவனம் மீது நடவடிக்கை

சென்னை, ஜூலை 23– முறைகேடாக, ஐ.எஸ்.ஐ., முத்திரையை பயன்படுத்திய, இரண்டு குடிநீர் நிறுவனங்கள் மீது, இந்திய தர நிர்ணய ஆணையம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்திய தர நிர்ணய ஆணைய அதிகாரிகள், சென்னை, குரோம்பேட்டையில் உள்ள, அக்குவோர் மினரல்ஸ்; ஈஞ்சம்பாக்கத்தில் உள்ள, ஏ.வி.அக்குவா பார்ம்ஸ் என்ற, இரண்டு குடிநீர் நிறுவனங்களில் திடீர் சோதனை நடத்தினர்.

இந்த நிறுவனங்கள், மற்ற நிறுனங்களின், ஐ.எஸ்.ஐ., பதிவை, முறைகேடாக பயன்படுத்தியது கண்டு பிடிக்கப் பட்டது.

அங்கிருந்து, முறைகேடாக, ஐ.எஸ்.ஐ., பதிவு செய்து தண்ணீர் நிரப்பப்பட்ட குடிநீர் கேன்கள், பாட்டில்கள், லேபிள்களையும் பறிமுதல் செய்தனர். 'இரு நிறுவனங்கள் மீதும், வழக்கு பதிவு செய்யப் பட்டுள்ளது.

இது போன்று முறைகேடுகள் தெரிந்தால், sro@bis.org.in என்ற இணையதளத்திலோ, 044 – 2254 1076 என்ற பேக்ஸ் வழியாகவும் புகார் செய்யலாம்' என, இந்திய தர நிர்ணய ஆணையம் தெரிவித்துள்ளது.

DINATHANTHI

24.07.2016

குரோம்பேட்டை-ஈஞ்சம்பாக்கத்தில்

# போலி ஐ.எஸ்.ஐ. தரச்சான்றுடன் குடிநீர் பாட்டில்கள் பறிமுதல்

சென்னை, ஜூலை.24-

சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில், குடிநீர் பாட்டில்களில் ஐ.எஸ்.ஐ. முத்திரை தரச்சான்றை முறையாக அனுமதி பெறாமல் சிலர் போலியாக பயன்படுத்தி வருவதாக இந்திய தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தின் தென் மண்டல அலுவலகத்துக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து தரக்கட்டுப்பாட்டு நிறுவன அதிகாரிகள் சென்னையை அடுத்த குரோம்பேட்டை மற்றும் ஈஞ்சம்பாக்கத்தில், குடிநீர் பாட்டிலில் அடைக்கப்படும் 2 குடோன்களில் சோதனை மேற்கொண்டனர்.

இந்த சோதனையில் ஐ.எஸ்.ஐ. தரச்சான்றை போலியாக பயன்படுத்தியது தெரிய வந்தது. இதையடுத்து போலியாக ஐ.எஸ்.ஐ. தரச்சான்று பொறிக்கப்பட்ட 20 லிட்டர் கொள்ளளவு உடைய 16 கேன்கள், ஒரு லிட்டர் கொள்ளளவு உடைய 588 குடிநீர் பாட்டில்கள் பறிமுதல் செய்யப்பட்டன. ஐ.எஸ்.ஐ. தரச்சான்றை தவறாக பயன்படுத்துபவர்கள் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும்.

ஐ.எஸ்.ஐ. தரச்சான்றை தவறாக பயன்படுத்தும் நபர்கள் குறித்து தகவல் தெரிந்தால் பொதுமக்கள் தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்துக்கு தகவல் தெரிவிக்கலாம். தகவல் தெரிவிக்கும் நபர்கள் குறித்த விவரங்கள் ரகசியமாக பாதுகாக்கப்படும்.

மேற்கண்ட தகவல் தென் மண்டல தரக்கட்டுப்பாட்டு நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

RAJASTHAN PATRIKA 23.07.16

कार्रवाई...

# पेयजल की डिब्बाबन्द इकाइयों पर छापा

चेन्नई. भारतीय मानक ब्यूरो क्षेत्रीय कार्यालय के दल ने चेन्नई एवं कांचीपुरम में पेयजल की डिब्बाबन्द इकाइयों पर छापे मारे। ब्यूरो के उप-निदेशक अजय खन्ना ने बताया कि इन इकाइयों में आईएसआई मार्का के दुरुपयोग की जानकारी मिली थी। क्रोमपेट इलाके में एक्वावर मिनरल्स से 20 लीटर के जार बरामद किए जो क्लासिक ब्राण्ड से बेचे जा रहे थे। इंजम्बाक्कम से ए.वी. एक्वा फार्म से एक लीटर की बोतलें बरामद की जो एक्वा रिच नाम से बेची जा रही थी। इन स्थानों पर अनियमितता पाए जाने पर इनके खिलाफ कार्रवाई शुरू की गई।

# Action against misuse of BIS stamp

**Chennai:** A team of officials from the Bureau of Indian Standards (BIS), Southern Regional Office (SRO), Chennai conducted search and seizure operations in Chennai and Kancheepuram districts on information of suspected misuse of ISI mark, on Thursday. They seized drinking water marketed under the names 'Classic' and 'Aquarich' at Chromepet and Injambakkam. SRO is initiating action under Section 33 of the Bureau of Indian Standards Act 1986. The offence is punishable with imprisonment up to one year or a fine up to ₹50,000 or both.

The public may intimate the authorities if they come across cases of misuse of ISI marks on any product. An e-mail may be sent to sro@bis.org.in, a press release said. TNN

TIMES OF INDIA
23.07.2016